பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 11 2024 7 15

செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரேசிலின் ரியோடி ஜெனிரோ நகரில் நடைபெற்று வரும் ஜி-20 உச்சி மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று நீடித்த வளர்ச்சி, மாற்று எரிசக்தி குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி உரையாற்றுகிறார்.
2. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப காவல்துறை நவீனமயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.
3. மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவை மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.
4. தென்-அமெரிக்க நாடான ஈக்வாடாரில் தேசிய அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
5. ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

**[]<<<>>>[]**

பிரேசிலின் ரியோடி ஜெனிரோ நகரில் நடைபெற்று வரும் ஜி-20 உச்சி மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று பிரதமர் திரு நரேந்திரமோடி உரையாற்றுகிறார்.

இதில் நீடித்த வளர்ச்சி, மாற்று எரிசக்தி குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

இன்று நடைபெறும் இரண்டாவது அமர்வில் மின்னனு தொழில்நுட்பட கட்டமைப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.,

இந்த மாநாட்டுக்கு இடையே பிரதமர் திரு நரேந்திரமோடி, பிரேசில், அர்ஜெண்டினா, சிலி மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளின் தலைவர்களை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

இந்த பேச்சுவார்த்தைக்குப் பின் கூட்டறிக்கை வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பிரேசில் பயணத்தை முடித்துக் கொண்டு திரு நரேந்திரமோடி கயனா புறப்பட்டுச் செல்கிறார்.

**[]<<<>>>[]**

உலக அளவில் கடல்வழி போக்குவரத்தில் சுதந்திரமான, வெளிப்படையான பாதுகாப்பான கடல்சார் போக்குவரத்தை உறுதி செய்வதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற கடல்சார் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் பிரதமர் அனுப்பிய செய்தியில், கப்பல், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்துத்துறை மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியவை என்று கூறியுள்ளார்.

சாகர்மந்தான் திட்டத்தின் வெற்றி ஒருமித்த கருத்துக்களை ஏற்படுத்துவதற்கு உதவிடும் என்று தெரிவித்துள்ளார்.

கடல்சார் பாதுகாப்பில் தொலைநோக்குடன் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான யோசனைகள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கு இத்தகைய கருத்தரங்குகள் வழிவகுக்கும் என்று திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப காவல்துறை நவீனமயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்திநகரில் 50-வது அகில இந்திய காவல் அறிவியல் மாநாட்டை அவர் இன்று தொடங்கி வைத்து பேசினார்.

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகிளல் காவல்துறை மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக வன்முறைகள் பெருமளவு குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதிகள், ஜம்மு-கஷ்மீரில் ஊடுறுவல் மற்றும் வன்முறை சம்பவங்கள் 70 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய சூழலுக்கு ஏற்ப காவல்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு அமித்ஷா கூறினார்.

**[]<<<>>>[]**

நீடித்த எரிசக்தி பாதுகாப்பு, தூய்மையான காற்று மற்றும் நவீன போக்குவரத்துக்கான கட்டமைப்புகளை உருவாக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக மத்தி.ய கனரக தொழில்துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கார்பன் உமிழ்வை குறைப்பது மற்றும் புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டை குறைப்பது ஆகியவற்றில் மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகக் கூறினார்.

மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வாகன நிறுத்தும் இடங்கள், அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் மின்சார வாகனங்களை மின்னேற்றம் செய்வதற்கான கட்டமைப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு எச் டி குமாரசாமி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தில்லியில் காற்று மாசு மோசமடைந்ததை அடுத்து வழக்கு விசாரணைகளை ஆன்லைன் மூலம் நடத்துவதற்கு நீதிபதிகள் அனுமதிக்க வேண்டுமென்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கன்னா கேட்டுக் கொண்டுள்ளார்

தில்லி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் காற்று மாசு மோசமடைந்து வருவது குறித்து தலைமை நீதிபதி, நீதிபதிகள், வழக்கறிஞர்கள் சங்கம் ஆகியோர் கூடி விவாதித்தனர்.

இந்த கூட்டத்தில் பேசிய தலைமை நீதிபதி திரு சஞ்ஜய் கன்னா, சாத்தியக்கூறு அடிப்படையில் வழக்கு விசாரணைகளை ஆன்லைன் மூலம் மேற்கொள்ளலாம் என தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவை மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

காலை ஏழு மணிக்குத் தொடங்கும் வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு கேமராகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு எஸ் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் நான்டெட் மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் நாளை நடைபெறவுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 38 தொகுதிகளில் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.

காலை ஏழு மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை ஐந்து மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவுக்காக 14 ஆயிரத்து 218 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் ஏழாயிரம் வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாகவும், இங்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாக்குப்பதிவை வெப் கேமரா மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு கே ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள 31 வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு காரணங்களுக்காக மாலை நான்கு மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 23-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

**[]<<<>>>[]**

தமிழகத்திலிருந்து சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை செய்து தருவதற்காக **‘சுவாமி chatbot’** எனும் வாட்ஸ்-ப் செயலி உருவாக்கப்பட்டுள்ளதாக கேரள அரசு தெரிவித்துள்ளது.

தமிழக அரசின் தலைமை செயலாளர் கேட்டுக் கொண்டதன் பேரில், இந்த வசதி செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது,

24 மணி நேரமும் செயல்படும் இந்த செயலி மூலம் உதவிகளைப் பெற 6 2 3 8 0 0 8 0 0 0 — என்ற எண்ணிற்கு **Hi** என்ற குறுஞ்செய்தி அனுப்பி பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.,

சபரிமலை அருள்மிகு ஐயப்பன் கோவில் வழிபாடு மற்றும் பூஜைக்கான நேரங்கள், தங்கும் வசதிகள், உணவகங்கள், போக்குவரத்து உள்ளிட்டவை குறித்தும் இந்த செயலி மூலம் ஐயப்ப பக்தர்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

**[]<<<>>>[]**

இந்திய சர்வதேச திரைப்பட விழா நாளை கோவாவில் தொடங்குகிறது,

இம்மாதம் 28-ஆம் தேதி வரை நடைபெறும் இவ்விழாவில் அம்மாநில முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த் மற்றும் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சக அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்த திரைப்பட விழாவில் 81 நாடுகளைச் சேர்ந்த 180 திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

விழா நடைபெறும் இடங்களில் தடையற்ற போக்குவரத்து உள்ளிட்ட வசதிகளை அம்மாநில அரசு செய்துள்ளது.

**[]<<<>>>[]**

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் வரும் 23-ஆம் தேதி காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக் கூடும் என்று அவர் கூறியுள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்தில் தென்தமிழகம் மற்றும் வடதமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தென்-அமெரிக்க நாடான ஈக்வாடாரில் தேசிய அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு பரவி வரும் காட்டுத்தீ, தண்ணீர் பற்றாக்குறை, வறட்சி போன்றவற்றை எதிர்கொள்வதற்காக 60 நாட்களுக்கு தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

17 இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதாகவும், அதில் ஐந்து இடங்களில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு எரிசக்தித்துறை அமைச்சர் திரு **Ines manzano** தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

பீகாரின் ராஜகிரில் இன்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா இரண்டு – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது,

இந்தியாவின் நவ்நீத் கௌர், **Lalremsiami** ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

இறுதிப்போட்டியில் இந்தியா – சீனாவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள 16 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன்ப்ரீத் கவுர் தலைமையிலான இந்திய அணியில், ஸ்மிருதி மந்தனா, ப்ரியா புனியா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், தேஜல், சைமா தாகூர், அருந்ததி ரெட்டி உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையேயான முதல் போட்டி ப்ரிஸ்பேனில் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சிலியில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் **Prarthana Thombare –** அமெரிக்காவின் **Robin Anderson** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில், புனே – உத்தரப்பிரதேச அணியையும், பெங்களூரு – பாட்னா அணியையும் எதிர்கொள்கின்றன.

***End of News***